FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318732

1. District : திருச்சி PS: VAC காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 12 மு.த.அ. எண் Date: 29.09.2025 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act-1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 25.09.25 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.09.2025 Time : நேரம் 07.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 60 km. வடமேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி உதவி பொறியாளர் அலுவலகம் TANGEDCO (OAM), நா. புட்டை, திருச்சி-

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. முத்தையா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சிங்கர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 06.06.97 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கணினி ஆபரேட்டர் (g) Address : முகவரி 8/132, கீழத்தெரு, மேலம்பட்டி கிராமம், முசிறி தாலுக்கா, திருச்சி-DT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
தி. தருமன், வணிக ஆய்வாளர், உதவி பொறியாளர் அலுவலகம், TANGEDCO, நா. புட்டை, திருச்சி DT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
காரணம் தெரியவில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Muthaiya 29/9/2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

29/09/25

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

29.09.2025

Name: பெயர் .....

Rank: நிலை ..... No. எண் .....

DSP/VAC, Trichy.

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அவர்கள் திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2025–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான், இன்று 29.09.2025 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி மாவட்டம், முசிறி தாலுக்கா, வேலம்பட்டி கிராமம், கீழத்தெரு, கதவு எண்.8/132ல் வசித்து வரும் சங்கர் மகன் முத்தையா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை மின்சார வாரிய AE அலுவலகத்தில் பணிபுரியும் Commercial Inspector-CI திரு.சரவணன் மற்றும் புகார்தாரர் திரு.முத்தையா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய, முதன்மை விசாரணை செய்யப்பட்டு உறுதிபடுத்தப்பட்டது. இன்று 29.09.2025 காலை 08.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.12/2025 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் ச.முத்தையா, த/பெ சங்கர், No.8/132, கீழத்தெரு, வேலம்பட்டி கிராமம், முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சிராப்பள்ளி. ஐயா, நான், திருச்சி மாவட்டம், முசிறி தாலுக்கா, வேலம்பட்டி கிராமம், கீழத்தெருவில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் BVSc., படித்து, தற்போது கால்நடை மருத்துவராக உள்ளேன். நான் வேலம்பட்டி கிராமத்தில் உள்ள எனது இடத்தில் சொந்தமாக வீடு கட்ட வேண்டி தாத்தையங்கார்பேட்டை மின்சார வாரிய AE அலுவலகத்தில் தற்காலிக மின் இணைப்பு பெற்று (மின் இணைப்பு எண்.06–285–004–855) கடந்த 21.12.2024 முதல் வீடு கட்டிவருகிறேன். தற்போது வீட்டின் வேலைகள் முடிந்துவிட்டது. ஆகவே, எனது வீட்டின் தற்காலிக மின் இணைப்பை (Temporary), வீட்டு மின் இணைப்பாக (Domestic) மாற்றவேண்டும் என்பதால், கடந்த 10 தினங்களுக்கு முன்னர் தாத்தையங்கார்பேட்டை மின்சார வாரிய AE அலுவலகத்தில் உள்ள CI சரவணன் அவர்களை சந்தித்து விபரம் சொன்னேன். CI சரவணன் அவர்கள் தான் வேலையாக உள்ளேன் என்றும், என்னை மாத கடைசியில் வந்து சந்திக்கும்படி சொன்னார். அதன்படி நான் கடந்த 25.09.2025 அன்று மாலை 4 மணி சுமாருக்கு தாத்தையங்கார்பேட்டை மின்சார வாரிய AE அலுவலகம் சென்று CI சரவணன் அவர்களை சந்தித்து விபரம் கேட்டேன். அதற்கு CI சரவணன் என்னிடம் சும்மா வந்து

பார்த்துட்டு போறீங்க, ஆன்லைனில் பதிவு செஞ்சுடீங்களா என்று கேட்டார். நான் அவரிடம் இல்லைங்க சார் என்று சொன்னேன். அதற்கு CI சரவணன் என்னிடம், ஒன்னும் கவனிக்கமாட்றீங்க என்று சொன்னார். அதற்கு நான் CI சரவணனிடம், சார் நாளைக்கு ஆன்லைனில் பதிவு செஞ்சுடுறேன், வேற என்ன சார் கவனிக்கனும் என்று கேட்டேன். அதற்கு CI சரவணன் என்னிடம், ஆன்லைனில் நாளைக்கு பதிஞ்சுடுங்க, எனக்கு தனியா 1,500 ரூபா கொடுத்துடுங்க என்று கேட்டார். நான் CI சரவணனிடம் என்ன சார் 1,500 ரூபா ஆன்லைன் பதிவு கட்டணமாக என்று கேட்டேன். அதற்கு அவர் நீங்க வெட்நெரி டாக்டராக இருக்கீங்க ஒன்னும் தெரியாத மாதிரி கேட்பீங்க, ஆன்லைன் பீச நீங்க நாளைக்கு கட்டிடுங்க, இந்த 1,500 ரூபா எனக்குதான் என்றும், பணம் கொடுத்தீங்கனா Temporary கரண்ட வீட்டு கரண்டா மாத்திகொடுப்பேன் இல்லாட்டி இப்படியே அழைஞ்சுகிட்டே இருக்கவேண்டியதுதான் என்று கறாராக தெரிவித்தார். அப்போதைக்கு வேறு வழியில்லாமல் நான் **CI** சரவணனிடம் சரிங்க சார், நாளைக்கு ஆன்லைனில் பதிவு செஞ்சுடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு CI சரவணன் என்னிடம், எனக்கு இரண்டு நாள் வேலை இருக்கு, நீங்க ஆன்லைனில் பதிவு செஞ்சுட்டு, திங்க கிழமை பணத்தோட வந்து என்ன பாருங்க என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு அந்த அலுவலகத்தைவிட்டு வந்துவிட்டேன். பின்னர் **26.09.2025** அன்று எனது வீட்டின் தற்காலிக மின் இணைப்பை (Temporary), வீட்டு மின் இணைப்பாக (Domestic) மாற்ற ஆன்லைனின் பதிவு செய்து கட்டணம் செலுத்தினேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட தாத்தையங்கார்பேட்டை மின்சார வாரிய கிணி அலுவலகத்தில் உள்ள CI சரவணன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (S.Muthaiya) 29.09.2025 Submitted to the Court of Hon,ble the Principal District and Sessions Judge, Tiruchirappalli. Received this report at 07.00 hrs on 29.09.2025 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.12/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.30 hrs on 29.09.2025. Sd.xxx (G.Manikandan) 29.09.2025 DSP, V&AC, Trichy.